## புதுக்கோட்டை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

(18-05-2016 – 22-05-2016)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 17-05-2016

### கடந்த கால வானிலை 13-05-2016 முதல் 16-05-2016 வரை

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 11.7 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 35-39 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 26-29 |
| மேக மூட்டம் | 3-8 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 32-95 |
| காற்றின் வேகம்(கி.மீ / மணி ) | 3-17 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை 22-05-2016 - 8.30 மணி நேரம் வரை

| காரணிகள் | 18.05.16 | 19.05.16 | 20.05.16 | 21.05.16 | 22.05.16 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 50 | 20 | 20 | 8 | 0.5 |
| அதிக பட்ச வெப்பநிலை(செ) | 27 | 27 | 27 | 29 | 30 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 24 | 24 | 24 | 26 | 27 |
| மேக மூட்டம் | 8 | 8 | 8 | 6 | 6 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 95 | 95 | 95 | 88 | 88 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 85 | 85 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 15 | 15 | 15 | 10 | 10 |
| காற்றின் திசை | மேற்கு வடமேற்கு | மேற்கு வடமேற்கு | மேற்கு வடமேற்கு | மேற்கு வடமேற்கு | மேற்கு வடமேற்கு |

### குறுஞ்செய்தி :

வரும் தினங்களில் ஆங்காங்கெ கனமழை எதிர்பார்க்கப்படுவதால் வயலில் நீர் தேங்குவதை தவிர்க்க மானாவாரி பயிர்களுக்கு போதிய வடிகால் வசதி செய்யவும்.

### எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

- விவசாயிகள் கோடை மழையைப் பயன்படுத்தி உழவு செய்வதன் முலம் மண்ணில் உள்ள களைகள் மற்றும் பூச்சிகளின் லார்வாக்களை கட்டுப்படுத்தலாம் மற்றும் மண் வளத்தை அதிகரிக்கலாம்.
- மண்ணின் ஈரத்தன்மையைப் பயன்படுத்தி பசுந்தாள் உரப் பயிர்களான தக்கைப்பூண்டு, சணப்பை மற்றும் கொளஞ்சி போன்றவற்றைத் தெளிக்கலாம்.
- 3 மாத வயதுடைய கன்றுக்குட்டிகள் மற்றும் 2 மாத வயதுடைய ஆட்டுக்குட்டிகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுக்க தடுப்புசி போடவும்.